நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## 6,100 டன் உணவு தானியங்கள் சேதம்: மாநிலங்களவையில் தகவல்

First Published : 20 Mar 2012 04:22:19 AM IST



புது தில்லி, மார்ச் 19: மத்திய அரசு சார்பில் 2010 - 2011 நிதியாண்டில் மொத்தம் 6 கோடி டன் உணவு தானியங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

இதில் 6,100 டன் மட்டுமே சேதமடைந்தன என்று மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) கே.வி.தாமஸ் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாநிலங்களவையில் கே.வி.தாமஸ் திங்கள்கிழமை பேசியது:

""மத்திய அரசு கொள்முதல் செய்யும் உணவு தானியங்கள், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாநில அரசுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2010-2011 நிதியாண்டில் மொத்தம் 6 கோடி டன் உணவு தானியங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

இதில் 6,100 டன் என்கிற மிகக்குறைந்த அளவிலான தானியங்களே சேதமடைந்துள்ளன.

தரமான உணவுப் பொருள்களை மட்டுமே விநியோகிக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசு பல்வேறு விதிமுறைகளை வகுத்துள்ளது.

இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து தானியங்களைப் பெறுவதற்கு முன் அதன் தரத்தைச் சோதனையிட மாநில அரசுகளுக்கு போதிய சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது.

மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்தும் மனித வளத்துறை அமைச்சகம், பிகார், மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், அசாம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் கடந்த 2 ஆண்டுகளாக தரமற்ற உணவு வழங்கப்படுவதாகப் புகார் கூறியுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் அதிகாரிகள், மதிய உணவுத் திட்ட அதிகாரிகள், இந்திய உணவுக் கழக அதிகாரிகள் இணைந்து ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளோம்" என்றார் கே.வி.தாமஸ்.

டார்ஜிலிங் போன்ற மலைப் பிரதேசங்களுக்கு மக்கிப்போன தரமற்ற உணவுப் பொருள்கள் அளிக்கப்படுவதாக எம்.பி.க்கள் கூறிய புகாரை மறுத்த கே.வி.தாமஸ், ""அங்கு வழங்கப்படும் தானியங்களின் தரம் திருப்திகரமாக இருப்பதாக மாநில அரசின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்" என்றார்.

## உணவுப் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கூட்டம்

First Published : 20 Mar 2012 05:55:54 AM IST

சென்னை, மார்ச் 19: உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் மற்றும் உரிமம் வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் திங்கள்கிழமை நடந்தது.

தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையின் கீழ் இயங்கும் சென்னை மாவட்ட உணவுப் பாதுகாப்புப் பிரிவு சார்பில் அரும்பாக்கத்தில்

நடந்த இந்த நிகழ்ச்சியில், அண்ணாநகர், அரும்பாக்கம், எம்.எம்.டி.ஏ. காலனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த உணவு விற்பனையாளர்கள் 200 பேர் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு 2006-ம் ஆண்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம், 2011-ம் ஆண்டின் விதிமுறைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. உணவு விற்பனையாளர்கள் 10 பேருக்குப் புதிதாக உணவு உரிமம் வழங்கப்பட்டது. உணவுப் பாதுகாப்புத் துறை சென்னை மாவட்ட நியமன அலுவலர் டாக்டர் கிருஷ்ணராஜ், உணவுப் பாதுகாப்பு அலுவலர் சதாசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விதைக் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு நவீன சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

First Published : 19 Mar 2012 01:42:55 PM IST

தஞ்சாவூர், மார்ச் 18: தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள சர்க்கரை ஆலை அலுவலர்கள் மற்றும் விதைக் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்திலுள்ள வேளாண்மை அறிவியல் மையத்தில் நடைபெற்ற 2 நாள் பயிற்சி முகாமிற்கு தமிழ்நாடு வேளாண்மை ஆணையரக வேளாண் துணை இயக்குநர் ஆர். ஞானஒளி தலைமை வகித்தார்.

முகாமில் அவர் பேசியது:

புதிய தொழில்நுட்பமான நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கரும்பு சாகுபடி செய்யும் போது அதிகபட்சமாக ஏக்கருக்கு 100 டன் மகசூல் பெற முடியும்.

நிழல் வகை குடில்கள் அமைத்து நாற்றங்கால் உற்பத்தி செய்யும் போது, நல்ல வாளிப்பான நாற்றுகளை குறைந்த நாள்களிலேயே உற்பத்தி செய்ய முடியும். கரும்புக்கு உரிய விலை கிடைக்க தமிழக அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து வருவதால், விவசாயிகள் இதை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

அறிஞர்அண்ணா சர்க்கரை ஆலை முதுநிலை கரும்பு அதிகாரி சந்திரசேகர் பேசியது:

கரும்பிலிருந்து கிடைக்கக் கூடிய அனைத்து பொருள்களுக்கும் நல்ல மதிப்பு உள்ளதால், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது.

விதைக் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு நிழல்வலை குடில்கள் அமைத்து நாற்றுகள் உற்பத்தி செய்வதற்காக ரூ. 1 லட்சம் வரை சர்க்கரை ஆலை நிதியுதவி அளிக்கிறது என்றார் அவர்.

திருவாரூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் கே. மயில்வாகனன், நீடாமங்கலம் உதவி வேளாண்மை இயக்குநர் என். இளஞ்செழியன் ஆகியோர் நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பத்தை விவசாயிகள் கடைபிடிப்பதால் கிடைக்கும் பலன்கள் குறித்து பேசினர்.

விதைப்பது எடுத்தல், குழித்தட்டு நாற்றங்கால் தயாரிப்பு, நடவு மற்றும் நடவுக்கு பிந்தைய உழவியல் தொழில்நுட்பங்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, இயந்திரங்கள் பயன்பாடு குறித்து கோவில்வெண்ணி பகுதியில் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் தி. செங்குட்டுவன் வரவேற்றார்.

ஒருங்கிணைப்பாளர் கு. சுதாகர் நன்றி கூறினார்.

## மிளகாய் வத்தல் விளைச்சல் அதிகரிப்பு: விலை வீழ்ச்சி

First Published : 19 Mar 2012 12:18:08 PM IST

விருதுநகர், மார்ச் 18: விருதுநகர் மாவட்டத்தில் மிளகாய் வத்தல் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம், திருச்சுழி, சிவகாசி, திருத்தங்கல், ஸ்ரீவில்லிபுத்தூர், வெம்பகோட்டை, வடமலாபுரம், சாத்தூர், அருப்புக்கோட்டை, காரியாபட்டி ஆகிய பகுதி கிராமங்களில் 10 ஆயிரம் ஹெக்டேரில் மிளகாய் பயிரிட்டுள்ளனர். கடந்தாண்டு 8 ஆயிரம் ஹெக்டேரில் பயிரிட்டிருந்தனர்.

இந் நிலையில், ரக வாரியாக அதாவது கோ-1 ஒரு குவிண்டால் ரூ.11 ஆயிரம் வரையும், வீரிய ரகம் ரூ.11,500 முதல் ரூ.12 ஆயிரம் வரை விற்பனையானது.

தற்போது ஒரு குவிண்டால் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.5500 வரை விலை போகிறது. ஒரு ஹெக்டேரில் சாதாரக மிளகாய் வத்தல் 6 முதல் 8 குவிண்டால் வரை மகசூல் இருக்கும். வத்தலாக 10 குவிண்டால் வரையிலும் மகசூல் கிடைக்கும். ஆனால், தற்போது விலை குறைந்துள்ளதால் முதலைக் கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து சிவகாசி வட்டார பாசன சங்கத்தின் தலைவர் திருவேங்கட ராமானுஜம் கூறியதாவது:

ஒரு ஏக்கரில் மிளகாய் பயிரிடுவதற்கு உழவு, நடவு செய்தல், உரச் செலவு, தெளிப்பு மருந்து அடித்தல், களை எடுத்தல் ஆகியவற்றிற்கு மொத்தம் ரூ.17 ஆயிரம் முதல் 18 ஆயிரம் வரை செலவாகிறது. தற்போது, கிராமங்களில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு சென்று விடுவதால், விவசாயக் கூலி வேலைக்கு செயற்கையான ஆள்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதோடு, மிளகாய்ப் பழம் பறித்து, காய வைப்பது வரை ஒரு கிலோவிற்கு ரூ.15 வரை செலவாகிறது.

விவசாயிகளின் நஷ்டத்தை தவிர்க்க ஒவ்வொரு வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளில் கடன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு மிளகாய் வத்தல் உள்ளிட்ட விளை பொருள்களை ஈடாக வைத்து 75 சதவீதம் வரை கடன் பெறலாம்.

விலை அதிகரிக்கும்போது கடன் தொகையை செலுத்தி விற்பனை செய்யும் வசதியை அரசு ஏற்படுத்தியுள்ளது. அக்கடனைக் கூட கூட்டுறவு வங்கிகள் மற்றும தேசிய வங்கிகள் வழங்க முன் வருவதில்லை.

எனவே விவசாயிகளின் நஷ்டத்தைக் குறைக்கும் வகையில் சீசன் நேரத்தில் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்றார் திருவேங்கட ராமானுஜம்.

## பூண்டி ஏரியில் 4 லட்சம் மீன் குஞ்சுகள் விடும் விழா

First Published : 19 Mar 2012 01:21:12 PM IST

திருவள்ளூர், மார்ச் 18: திருவள்ளூர் அடுத்த பூண்டி சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்தில் 4.1 லட்சம் வளர்ந்த புல் கெண்டை மீன் குஞ்சுகள் விடும் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

மீன் குஞ்சுகளை ஏரியில் விட்டு மான் வளத்துறை உதவி இயக்குநர் ரவிச்சந்திரன் பேசியது: ஐதராபாத்தைச் சேர்ந்த தேசிய மீன்வள அபிவிருத்தி வாரியம் நிதியுதவியுடன் மீன்துறை மூலமாக மீனவர்கள் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கில் மீன் குஞ்சுகள் விடப்படுகின்றன.

கடந்த 2 ஆண்டுகளில் 37.88 லட்சம் மீன்குஞ்சுகள் விடப்பட்டன. நடப்பாண்டு இதுவரை 3.07 லட்சம் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக இப்போது 4.1 லட்சம் வளர்ந்த புல்கெண்டை மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. மேலும் 3 லட்சம் மீன் குஞ்சுகள் விரைவில் விடப்படும். நாள்தோறும் பூண்டி ஏரியில் இருந்து 300 முதல் 500 கிலோ வரை மீன் பிடிக்கப்படுகிறது. இது விரைவில் 1000 கிலோவாக உயரும் வாய்ப்புள்ளது என்றார்.

ஒன்றிய குழு துணைத் தலைவர் கந்தசாமி, ஊராட்சித் தலைவர்கள் அம்புரோஸ், மாரி, மீன்துறை ஆய்வாளர்கள் ஜனார்த்தனன், கங்கதாரன், ஆராய்ச்சி உதவியாளர் முத்துலட்சுமி, உள்நாட்டு மீனவர் சங்க நிர்வாகிகள் அரி, பழனி, ஏசுபிள்ளை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

## ஈர்க்கும் ஈமு கோழி, எகிறும் நெருப்புக் கோழி: கால்நடை அறிவியல் பூங்காவில் உற்சாகம்

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2012,03:03 IST

கருத்தை பதிவு செய்ய

பறவை, கால்நடை வளர்ப்பு
பற்றிய அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துவங்கப்பட்ட "கால்நடை அறிவியல் பூங்கா' மக்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

சென்னை மாதவரம் பால்பண்ணை பகுதியில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அருகில் "கால்நடை அறிவியல் பூங்கா' உள்ளது.

இங்குள்ள தனி வளாகத்தில் 100 கறவை மாடுகள் பசுந்தீவன சத்துணவுடன் பராமரித்து வளர்க்கப்படுகின்றன. அதை ஒட்டிய அறிவியல் பூங்காவில் ஈமு கோழி, நெருப்புக் கோழி, கின்னி கோழி, போலீஸ் கேப் கோழி, பச்சைக்கிளிகள், லவ் பேர்ட்ஸ், ஜப்பானிய காடை, செல்லக்கிளிகள், கணுக்காலில் சிறகு முளைத்த பான்டம் இன கோழி, வான்கோழி, வாத்து, முயல், தமிழகத்தின் அனைத்து மாவட்ட வெள்ளாடுகள், வெண் பன்றிகள் மற்றும் வண்ண மீன்கள் ஆகியவை வளர்க்கப்படுகின்றன.

பறவைகள், பறக்க முடியாத பறவைகள், ஆடு, மாடு, பன்றி உள்ளிட்ட கால்நடைகள் மீது அன்பு செலுத்துவோரை உற்சாகப்படுத்தி, ஆர்வலர்களின் விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில் அவைகள் பராமரிக்கப்படுகின்றன.

மழலையர் பள்ளி மாணவ, மாணவியர் உட்பட சென்னை நகர்ப்புறத்தைச் சேர்ந்த பலரும் பறவையினங்கள் பற்றியும், அவற்றின் பின்னணி குறித்தும் அறிந்து கொள்ள முடியும். மேலும் பறவை மற்றும் கால்
நடைகள் எழுப்பும் ஒலி (தாய் மொழி) அவற்றின் ஆயுட்காலம் உள்ளிட்ட சிறப்பு தகவல்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன.

நெருப்புக் கோழி

பறக்க முடியாத மிகப்பெரிய பறவையினமான இதன் பூர்வீகம் தென்னாப்பிரிக்கா. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் இறக்குமதி செய்யப்பட்டு, அபிவிருத்தி கண்ட இந்த கோழியினம், காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் 70 முதல் 80 ஜோடிகள் உள்ளன.

அதில் ஒரு ஜோடி மாதவரம் கால்நடை அறிவியல் பூங்காவிலும், மற்றொரு ஜோடி வண்டலூர் பூங்காவிலும் உள்ளது. மகாராஷ்டிரா மாநில பூங்காவிற்காக ஒரு ஜோடி கேட்கப்பட்டுள்ளது. 9 அடி உயரம் கொண்ட இந்த நெருப்புக் கோழி இனம் சராசரியாக 130 முதல் 150 கிலோ உடல் எடை கொண்டது. ஒரு மணி நேரத்திற்கு 70 கிலோ மீட்டர் வேகத்தில் குதிரையைப் போல் ஓடும் திறன் கொண்டது.

இதன் உற்பத்திப்பொருட்கள் இறைச்சி, முட்டை, எண்ணெய், தோல். ஒரு முட்டை ஒன்றரை கிலோ எடை கொண்டது. 42 முதல் 44 நாட்கள் வரை அடை காக்கும். அதன் ஆயுட்காலம் 65 முதல் 70 ஆண்டுகள்.

ஈமு கோழி

ஆஸ்திரேலியாவை பூர்வீகமாகக் கொண்ட இக்கோழி, பறக்க முடியாத இரண்டாவது பறவையினமாகும். 4 முதல் 5 அடி உயரம் கொண்ட ஈமு கோழி மணிக்கு 50 முதல் 60 கி.மீ., வேகத்தில் ஓடும் திறன் கொண்டது.

இந்தியாவில் தற்போது 2 லட்சத்திற்கும் அதிகமாக உள்ள ஈமு கோழிகளில் சரிபாதி அளவிற்கு பெட்டைக் கோழிகள் உள்ளன.

பண்ணை மற்றும் நாட்டுக்கோழிகளுக்கு அடுத்தபடியாக ஈமு கோழி இறைச்சி அனைத்து தரப்பு மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய உணவுப் பொருளாக உள்ளது.

அதனால் இதன் உற்பத்திப்பொருட்களான இறைச்சி, முட்டை, எண்ணெய், தோல் ஆகியவை சமீப காலத்தில் மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

ஒரு கோழியில் 5 முதல் 6 லிட்டர் எண்ணெய் கிடைக்கிறது. அதில் அதிக அளவில் ஒமேகா 3 மற்றும் ஒமேகா 6 என்ற கொழுப்பு அமிலங்கள் இருப்பதாலும், எளிதில் ஊடுருவும் தன்மையாலும் பல்வேறு மருத்துவத் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது.

ஒரு முட்டை 700 முதல் 800 கிராம் எடை கொண்டது. 52 நாட்கள் அடை காக்கும். ஈமு கோழியின் ஆயுட்காலம் 35 முதல் 40 ஆண்டுகள்.

மெக்சிகோவில் 16ம் நூற்றாண்டில் அறிமுகமான வான்கோழி, கிழக்கு ஐரோப்பாவில் அழகுக்காக வளர்க்கப்படும் போலீஸ் கேப் கோழி மற்றும் முழுமையான வளர்ச்சி என்றாலும் கோழி இனங்களில் மிகச்சிறிய உருவமாக காட்சி அளிக்கும்.

கணுக்காலில் இறகு முளைத்த பான்டம் கோழிகள் தவிர, நம்நாட்டு வீட்டு பறவைகளான கிளிகள், மனிதர்களோடு எளிதாக நெருங்கிப் பழகும் செல்லக்கிளிகள் உட்பட அறிவியல் பூங்காவில் உள்ள மரங்கள் கூட பார்வையாளர்களை ஈர்க்கின்றன.

இறைச்சி விற்பனையில் லாபம் தரும் வாத்து இனங்கள், முயல், ஜப்பானிய காடைகள், வெண் பன்றி ஆகியவை பற்றியும் இங்கு தெரிந்து கொள்ளலாம். இவை தவிர 15 ஆண், 10 பெண் என மொத்தம் 25 ஈமு கோழிகள் கொண்ட ஆராய்ச்சி மையமும் இங்கு செயல்பட்டு வருகிறது. இங்கு பார்வையாளர்களுக்கு அனுமதி கிடையாது.

10 ஆயிரம் பார்வையாளர்கள்

கடந்த 2008ம் ஆண்டு முதல், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இங்கு பார்வையாளர்களாக வந்துள்ளனர். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பிரபாகரன் கூறியதாவது:

கல்வி அறிவு விழிப்புணர்வு தொடர்பாக பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் மட்டுமல்லாது கால்நடை, பறவை, மீன் வளர்ப்பு மற்றும் பசுந்தீவனம் உற்பத்தி உள்ளிட்ட தொழில் ரீதியிலான தகவல்களுக்காக விவசாயிகளும் வந்து செல்கின்றனர்.

பூங்காவை மேம்படுத்த பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரும் கோடை விடுமுறையில்

பள்ளி மாணவ, மாணவியர் உட்பட அதிக அளவிலான பார்வையாளர்கள் வருவர் என எதிர்பார்க்கிறோம்.

## ஆரஞ்சுப் பழம் சீசன் துவக்கம்

பதிவு செய்த நாள் : மார்ச் 19,2012,23:04 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர் :ஆரஞ்சுப்பழம் சீசன் துவங்கியதையொட்டி கடலூரில் 10 டன் ஆரஞ்சுப் பழங்கள் குவிந்துள்ளது.

கோடை என்றாலே, ஆரஞ்சு, சாத்துக்குடி, அண்ணாச்சி உள்ளிட்ட பழங்களின் சீசனும் துவங்கி விடும். மேலும் கோடை காலத்தில் வெயிலின் சூட்டைத் தணிக்க பொதுமக்கள் நீர்சத்துள்ள பழங்களை அதிகளவில் வாங்கி பயன்படுத்துவர். "தானே' புயலுக்குப் பின்னர் தற்போது கோடை வெயில் சுட்டெரிக்கிறது.

தற்போது ஆரஞ்சுப்பழம் சீசன் என்பதால் வெளி மாநிலங்களிலிருந்து ஆரஞ்சுப்பழம் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும் கடலூரில் உள்ள மொத்த வியாபாரிகள் மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் நாக்பூர் அடுத்த அமராவதியிலிருந்து ஆரஞ்சுப் பழங்கள் கொள்முதல் செய்து வருகின்றனர்.

கடலூரில் மட்டும் நேற்று முன்தினம் ஒரே நாளில் 10 டன் ஆரஞ்சுப்பழம் குவிந்துள்ளது. ஆரஞ்சுப் பழம் கிலோ 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## மூன்றே மாதங்களில் மஞ்சள் ரூ.1,000 சரிவு!

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2012,04:16 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு : நடப்பு 2012ம் ஆண்டு துவக்கத்தில் இருந்து, இதுவரை மஞ்சள் குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் வரை குறைந்துள்ளது, விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சென்ற, 2010-2011ம் ஆண்டு மஞ்சள் விலை உயர்வு காரணமாக, சென்றாண்டு பருவத்தில் உற்பத்தி இரட்டிப்பாக உயர்ந்துள்ளது. இதுவரை இல்லாத அளவில் மண்டிகளுக்கு மஞ்சள் மூட்டைகள் நிரம்பி வழிகின்றன. இந்நிலையில், உலகநாடுகள் மற்றும் உள்நாட்டில் மஞ்சள் தேக்கம் அடைந்துள்ளதால், பயன்பாடும் வெகுவாக குறைந்து வருகிறது.

இதை காரணம் காட்டி வியாபாரிகளும் திட்டமிட்டு, மஞ்சள் விலையைக் குறைத்து வருவதாக, விவசாயிகள் தெரிவிக்கின்றன. தாங்கள் உற்பத்திச் செலவைக் கூட, எடுக்க முடியாத

சூழ்நிலையை ஏற்பட்டுள்ளது. இதை தவிர்க்கும் பட்சத்தில் அரசு மஞ்சளுக்கு குறைந்த பட்சம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வந்தாலும், அரசு செவிசாய்க்காததே தொடர்ந்து மஞ்சள் விலை வீழ்ச்சி அடைவதற்கு முழு காரணம் என, விவசாயிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் செயலாளர் தெய்வசிகாமணி கூறியதாவது: சென்ற 2010-2011ம் ஆண்டு பருவத்தில் மஞ்சள் விலை உயர்வு காரணமாக மஹாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழகத்தில் மஞ்சள் சாகுபடி பரப்பளவும் இருமடங்காக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக நடப்பு ஆண்டு மஞ்சள் சீஸன் துவக்கத்தில் இருந்து, வரலாறு காணதாக வகையில் மண்டிகளுக்கு விவசாயிகள் மாதிரிகள் கொண்டு வருகின்றன.

எனினும், தேவைக்கு அதிகமான வரத்தால், வியாபாரிகளும் திட்டமிட்டு, மஞ்சளை வாங்கி, குடோன்களில் பதுக்கி வைப்பதே குறிக்கோளாக உள்ளது. இதனால், விவசாயிகள் உற்பத்தி செலவைக் கூட எடுக்க முடியாத பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

நடப்பு 2012, ஜனவரியில் அதிகபட்சம் விரலி மஞ்சள் குவிண்டால், 4,899 ரூபாய்க்கும், கிழங்கு 4,393 ரூபாய்க்கும் விலை போனது. தற்போது, விரலி குவிண்டால் 3,889 ரூபாய்க்கும், கிழங்கு 3,429 ரூபாய்க்கும் விலை போகிறது. சென்ற இரண்டரை மாதங்களில் குவிண்டாலுக்கு சராசரி, 1,000 ரூபாய் வரை விலை குறைந்து, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேலும் விலை உயர்வதற்கான சாத்தியம் இல்லை என தெரிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## கோ-கோ சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2012,00:36 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி :ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையம், கோவை வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் கொச்சியிலுள்ள முந்திரி மற்றும் கோகோ வளர்ச்சிக்கழகம் இணைந்து, கோகோ தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடத்துகிறது.

ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் இன்று(20ம் தேதி) துவங்கும் பயிற்சி முகாம் வரும் 22ம் தேதி வரை நடக்கிறது. முகாமில், வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையை இயக்குனர் சந்திரசேகரன், தோட்டக்கலைத்துறை டீன் குமார், ஆழியாறு தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் ராஜமாணிக்கம், வேளாண் பல்கலைக்கழக நீர்வள நிலவளத்திட்ட இயக்குனர் செல்லமுத்து ஆகியோர் பேசுகின்றனர்.

கோகோ சாகுபடியின் முக்கியத்துவம், கோகோ ரகங்களை மேம்படுத்துவது, கோகோவில் நீர்நிர்வாகம், தென்னையில் ஊடுபயிராக கோகோ, கோகோவில் இயற்கை வேளாண்மை,

பயிர்பாதுகாப்பு, மார்க்கெட்டிங், கோகோ அறுவடை மற்றும் பதப்படுத்துதல் உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.
மூன்றாம் நாளான 22ம் தேதி, பயிற்சி பெறும் விவசாயிகளை சேத்துமடையில் உள்ள கோகோ விவசாயி ஜெயராஜ் தோட்டத்திற்கு களப்பயணமாக அழைத்து சென்று, களப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

## வளர்ச்சிக்கான விதை எங்கிருக்கிறது?

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2012,01:17 IST

கருத்தை பதிவு செய்ய

அவிநாசி :""நமது நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கான விதை கிராமத்தில் உள்ளது; அங்கு படிப்பவர்களிடம் அபார திறமை உள்ளது,'' என்று எஸ்.பி., பாலகிருஷ்ணன் பேசினார்.
அவிநாசி அருகே பேரநாயக்கன்புதூர் அரசு நடுநிலைப்பள்ளியில் ஐம்பெரும் விழா நடந்தது. பழங்கால நாணயங்கள் கண்காட்சியை கிராம கல்விக்குழு தலைவர் வரதராஜ் திறந்து வைத்தார். விளையாட்டு போட்டிகளை பி.டி.ஏ., தலைவர் பெரியசாமி துவக்கினார். ஆண்டு விழாவுக்கு, ஏ.இ.ஓ., ஸ்ரீகலா தலைமை வகித்தார். தலைமையாசிரியர் வெங்கடாசலம் வரவேற்றார். ஆசிரியர் பாலசுப்ரமணியம் ஆண்டறிக்கை வாசித்தார்.
எஸ்.பி., பாலகிருஷ்ணன், நாணய கண்காட்சியை பார்வையிட்டு, விளையாட்டு, இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளித்து பேசியதாவது:
கிராமப்புற பள்ளியில் இதுபோன்ற நிகழ்வுகள் நடத்துவது பாராட்டுக்குரியது. நகர்ப்புறத்தை விஞ்சக்கூடிய திறமை கிராமப்புற மாணவர்களுக்கு உள்ளது. ஆனால், அதை வெளிப்படுத்த தயங்குவதன் மூலம் பலர் வெளிச்சத்துக்கு வர முடிவதில்லை. ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் கிராமத்தில் பலரிடம் காணப்படும்.
பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் கருத்துகளை கேட்டு நடந்தால் உலகமே உங்களை மெச்சும். பிறக்கும்போது அனைவரும் ஒன்றுதான்; வளரும்போது திறமைகளை வளர்த்துக் கொள்வது புத்திசாலித்தனம். பெண்களுக்கு திறமையிருந்தும் சரியான வாய்ப்பு அமையாவிட்டால், அவர்கள் பின்தங்க நேரிடுகின்றனர். இருப்பினும், பலர் தடைகளை தாண்டி முன்னேறி உள்ளனர்.
கிராமப்புறத்திலுள்ள பெற்றோர் தங்களது பெண் குழந்தைகளை தொடர்ந்து படிக்க வைக்க வேண்டும். அவர்களிடமுள்ள தனித்திறமையை கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, அர்ப்பணிப்பு ஆகியவற்றோடு ஒழுக்கத்தை கடைபிடித்தால் கண்டிப்பாக உயரத்தை தொடுவீர்கள். கிராமங்களில்தான் நாட்டின்

வளர்ச்சிக்கான விதை இருக்கிறது. அந்த விதை மாணவர்கள் கையில் உள்ளது. அவர்கள் முன்னேறினால் நாடு முன்னேறும்.
இவ்வாறு, எஸ்.பி., பேசினார்.பள்ளி மேலாண்மை குழு தலைவர் சரஸ்வதி, வடுகபாளையம் பள்ளி முன்னாள் தலைமையாசிரியர் நடராஜன், பள்ளி புரவலர் நஞ்சப்பன், கிராம கல்விக்குழு தலைவர் வரதராஜ் ஆகியோர் பேசினர். தொடர்ந்து பள்ளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. அரிய காட்சிகளின் வீடியோ தொகுப்பு திரையிடப்பட்டது. ஆசிரியை சசிகலா நன்றி கூறினார்.

**"விவசாயிகளை ஏமாற்றிய பட்ஜெட்'**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2012,01:07 IST

கருத்தை பதிவு செய்ய

பொங்கலூர் :"மத்திய அரசின் பட்ஜெட், விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது,' என, கொங்கு வேளாள கவுண்டர் பேரவை மாநில தலைவர் மணிகண்டன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
மத்திய அரசின் கொள்கைகளால், அரசு நிர்வாகம் முடங்கி உள்ளதையே பட்ஜெட் உணர்த்துகிறது. வசதிகளை குறைத்து, வரிகளை பெருக்கி, ஏழை மக்களை கசக்கி பிழியும் மக்கள் விரோத பட்ஜெட்டாக உள்ளது. வருமான வரி உயர்வு கண்துடைப்பு நாடகம். மத்திய அரசு, தமிழக மக்களுக்கு, எந்த பயனுள்ள திட்டத்தையும் அறிவிக்கவில்லை.
விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், உணவு உற்பத்தியை பெருக்கும் வகையிலும், அவர்களின் உழைப்புக்கு ஏற்ற விலை நிர்ணயம் இல்லாத நிலையில், அதற்குரிய புதிய திட்டம் எதையும் அறிவிக்கவில்லை. உர மானியத்தை விவசாயிகளுக்கு நேரடியாக வழங்காமல், விற்பனையாளர்களுக்கு வழங்குவது விவசாயிகளுக்கு பாதகமாகவே அமையும்.
விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு திட்டம், மின்தட்டுப்பாட்டை போக்க புதிய முயற்சி, தேசிய நதிநீர் இணைப்பு போன்றவை பற்றி எந்த அறிவிப்பும் இல்லை. மக்கள் மீது வரி விதித்து, வசதி படைத்த நிறுவனங்களை வளர்ப்பதன் மூலம், பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என்ற மத்திய அரசின் முடிவு, பிற்போக்குத்தனமான செயல்பாட்டையே காட்டுகிறது. விவசாயிகள், ஏழை, நடுத்தர மக்களுக்கு எவ்வித பயனுமில்லாத பட்ஜெட், என்று தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 20,2012,00:51 IST

கருத்தை பதிவு செய்ய

ஊட்டி :தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்,தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் இந்திய வானிலை துறை சார்பில்"வேளாண்மையில் வானிலையின் பங்கு' என்ற விழிப்புணர்வு முகாம் ஊட்டியில் நடந்தது.

ஊட்டி ரோஜா பூங்கா பயிற்சி அரங்கில் நடந்த முகாமில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் செல்வராஜ் வரவேற்றார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நிர்வாகக்குழு உறுப்பினர் அர்ஜுணன் தலைமை வகித்தார்.

பிராந்திய வானிலை மைய இயக்குனர் குழந்தைவேலு சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று,"காலநிலைக்கு தகுந்தாற் போல் எவ்வாறு வேளாண்மை செய்வது,' என்பது பற்றி விளக்கினார்.

உபாசி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் குமார வடிவேலு, "வேளாண்மையில் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பங்கள்,' பற்றி பேசினார்.

தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் செல்விபிரபா நன்றி கூறினார்.

---

தினகரன்

## வேளாண் வளர்ச்சி பணி கூடுதல் இயக்குனர் ஆய்வு

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-19 12:28:24

துறையூர்: தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை மூலம் துறையூர் ஒன்றியத்தில் நடந்து வரும் பல்வேறு நலத்திட்ட வளர்ச்சிப்பணிகளை கூடுதல் வேளாண்துறை இயக்குனர் இளங்கோவன் ஆய்வு செய்தார். துறையூர் ஒன்றியத்தில் புட்மா திட்டம் மூலம் வேளாண் விளைபொருட்கள் குழுக்கள் அமைத்தல் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ரூ.30,000 மானிய விலையில் ரோட்சிடோவேட்டர் விநியோகம், சாகுபடி பரப்பு ஒத்திசைவு ஆகிய வளர்ச்சி பணிகளை ஆய்வு செய்தார். இதைதொடர்ந்து வெங்டேசபுரத்தில் நடந்து வரும் பயிர் சாகுபடி பரப்பை ஆய்வு செய்தார்.

துறையூர் வட்டாரத்தில் நடந்து வரும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டம், விதை கிராம திட்டங்களை ஆய்வு செய்தார். ஆய்வின்போது கூடுதல் வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோவன், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர், துணை வேளாண்மை இயக்குனர் (மத்திய திட்டம்) சந்திரசேகரன், துறையூர் வேளாண்

உதவி இயக்குனர் ராஜசேகரன், தோட்டக்கலை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன், வேளாண்மை அலுவலர்கள் செல்வம், பிரபாகரன் உடனிருந்தனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்

## *விளைச்சல் அதிகரிப்பால் வெங்காயம் விலை குறைய வாய்ப்பு*



*ஜெயஸ்ரீ போஸல்*
*புனே*
*விளைச்சல் அதிகரிப்பால் வெங்காயம் விலை குறைய வாய்ப்புள்ளதாக தெரிகிறது.*
*மஹாராஷ்டிரா, குஜராத் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்கள் வெங்காய உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன.*
*நம் நாட்டை பொறுத்த வரையில் கரீஃப், கரீஃப் பின்பருவம் மற்றும் ரபீ ஆகிய மூன்று பருவங்களில் வெங்காயம் பயிரிடப்படுகின்றன. மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 60 சதவீதம் ரபீ பருவத்தில் உற்பத்தி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.*
*சாதகமான பருவ நிலை மற்றும் பயிரிடப்படும் பரப்பளவு அதிகரிப்பு போன்ற காரணங்களால் தற்போதைய ரபீ பருவத்தில் வெங்காயம் உற்பத்தி சிறப்பாக அதிகரிக்கும் என தேசிய தாவர ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.*
*கடந்த கரீஃப் பின் பருவத்திலும் விளைச்சல் அமோகமாக இருந்ததையடுத்து விலை கிலோவுக்கு ரூ.4 லிருந்து ரூ.5 வரையே உள்ள நிலையில் எதிர்பார்க்கும் விலை கிடைக்காததால் விவசாயிகள் விற்பனையை தாமதம் செய்து வந்துள்ளனர். இதனால் வெங்காயம் அழுகி வீணாவதால் விவசாயிகள் பாதிப்புக்குள்ளாவது தவிர்க்க இயலாததாக உள்ளது. இந்நிலையில், ரபீ பருவ அறுவடை நெருங்குவதால் கிடங்கு வசதிகள் தட்டுப்பாடுகாரணமாக விவசாயிகள் விற்பனையை மேலும் தாமதம் செய்ய இயலாது என கூறப்படுகிறது. இது மஹாராஷ்டிரா அரசுக்கு இடர்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. எனவே, விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்யும் திட்டமொன்று அம்மாநில அரசின் பரிசீலனையில் உள்ளதாக தெரிகிறது.*